ஆரம்பித்திருக்கிறுர்கள். அந்தப் பூமிகளையெல்லாம் அவர்களுக்கே பட்டா போட்டுக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தனிக் கேள்வி போடவும்.

திரு. எ. சுவாமிதாஸ்: இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் வந்த அகதிகள் தோட்டத் தொழில் செய்து வந்தவர்கள். எங்கள் மாவட்டத்திலே கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலமோர் பகுதிக்கு அடுத்தாற்போல் அரசுக்குச் சொந்தமான abandoned எஸ்டேட்டுகள் நிறைய இருக்கின்றன. அரசு அவற்றை யெல்லாம் அகதிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: அதுபற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) பேரவை நிகழ்ச்சி நிரல் முன்கூட்டியே உறுப்பினர்களுக்கு அனுப்புவது குறித்து.

* திரு. என். கிட்டப்பா: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவை நிகழ்ச்சிகள் பேரவை விடுதிக்கு அனுப்பப்படுகிறது. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்தப் பேரவையிலே அது குறித்து எடுத்துச் சொல்லி இருந்தும் நேற்றைய தினம் சேர்த்து நான்கு நாட்களாக வரவில்லை. அங்கே உள்ளவர்களிடம் அதை மீண்டும் மீண்டும் கேட்டும்கூட அவர்கள் தருவதில்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அஜெண்டாவா?

* திரு. என். கிட்டப்பா: அஜெண்டா தான், அட்லீஸ்ட் அஜெண்டா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஏற்கனவே பேரவையிலே முதல் தடவையாக வைக்கப்படுகிறது. இரண்டாவது முறையாக அங்கே அனுப்பப்படுகிறது. நாளைய நிகழ்ச்சிகள் பற்றி இன்றைக்கே அவையிலே தரப்படுகிறது.

(முற்பகல் 9-30)

திரு. என். கிட்டப்பா : குறிப்புப் புத்தகங்கள், இன்றைய நிகழ்ச்சிக்கான குறிப்புப் புத்தகங்கள், கேள்விகள், அஜண்டா வுடன் சேர்த்து . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : கொடுக்கவில்லை யென்பதைத் தாழ்மை யுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ப.உ.ச. அவர்கள் சொல்கிறார்கள்.

திரு. ப. உ. சண்முகம் : நேற்று அவையிலே கொடுக்கப்பட்டது என்பது உண்மை. ஆனால், மாண்புமிகு கிட்டப்பா அவர்கள் ஹாஸ்டலிலே தங்கியிருக்கிற உறுப்பினர்களுக்கு வசதியாக அஜண்டாவை ரோனியோ போட்டுக் கொடுக்க வேண்டுமென்று தான் கேட்கிறார். அதைக் கொடுப்பதிலே தவறில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : ஆன் எ பாயிண்ட் ஆஃப் இன்ஃபர் மேஷன். மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் கூறிய குறை எனக்கு முதல் நாள் ஏற்பட்டு, நான் அந்த ஊழியர்களை விசாரித்த நேரத்தில், அங்கு அறைகளை அடைத்துவிட்டுப் போய் விடுகிற காரணத்தால், பெரிய புத்தகங்கள், காகிதங்கள் இவைகளைக் கொண்டுவந்து போட முடியாமல் அலுவலர்கள் திரும்ப எடுத்துப் போய், எப்பொழுது கதவைத் திறக்கிறோமோ அப்பொழுதுதான் கொடுக்க வேண்டிய நிலைமை இருப்பதாகவும், கதவு திறந்திருக்குமானால் அப்பொழுது கொடுப்பதாகவும் சொன்னார்கள். நேற்றைக்கு 7 மணிக்குக் கொடுத்துக் கையெழுத்து வாங்கினார்கள். நேற்று நான் கேட்டேன், இவ்வளவு நாட்களாக இல்லாமல் இப்பொழுது என் கையெழுத்து வாங்குகிறீர்கள், என்று. வரவில்லையென்று குறை சொல்வதால், கையெழுத்து வாங்குகிறோம் என்று சொன்னார்கள்.

திரு. என். கிட்டப்பா : நான் கையெழுத்துப் போடவில்லை. ஏனென்றால், என்னிடத்திலே கொடுக்கவில்லை. அது மட்டுமல்ல, நான் திருப்பி இரண்டு மூன்று தடவை கேட்டபொழுது கூடக் கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட நடைமுறைக் குறைபாடுகள் இருந்தால் அதைத் திருத்துவதற்கும், முறைப் படுத்துவதற்கும் நான் உத்தரவிடுகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : உரிய நேரத்தில் மாண்புமிகு உறுப் பினர்கள் சபைக்கு வரமுடியாத சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட் டிருக்கிறது. பஸ் விடுகிறார்கள், உறுப்பினர்களுக்கு மட்டும் என்று. ஆனால், அந்த பஸ்ஸில் உறுப்பினர்கள் ஏற முடியவில்லை. அப்படியே ஏறினாலும் மிகுந்த பலசாலிகள்தான் ஏற முடிகிறது. ஆகவே, உறுப்பினர்களுக்கு வேறு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அடுத்து, அங்கே, விடுதியிலே, தொலைபேசியிலே பேச வேண்டு மென்றால் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அங்கே, இண்டர்னேஷனல் சென்ட்டர் மாதிரி, யூ. என். சென்டர் மாதிரி இருக்கிறது. பாவம்; எக்ஸ்சேஞ்சிலே இருப்பவர்களை மிகவும் சிரமப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு அறையிலும் 10, 15 பேர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை என்னென்று சொன்னால் The allotment has been made only with an intended purpose to the legislators. That facility and amenity has been utilised by others, actually which has to be utilised by others, actually which has to be utilised by the Members. That are being utilised by others who are not members லெஜிஸ்லேட்டிவ் சாங்க்ஷன் இல்லாமலேயே without legislature sanction the facilities that are povided to the Members of the Legislature are utilised by others who are not ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மானியக் கோரிக்கைகளிலே இவைபற்றி தாராளமாகப் பேசலாம். பஸ் குறைபாடுகளைச் சொன்னீர்கள் . . .

திரு. எம். ஏ. லத்தீப் : மானியம் வரும்வரையிலே காத்திருக்க வேண்டுமானால், இது ரொம்ப சீரியஸ் சிச்சுவேஷன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பஸ்ஸிலே இருக்கிற சிரமங்கள் எனக்கும் தெரியும். நானும் சட்டமன்ற உறுப்பினராக வந்த பொழுது, தொகுதியிலிருந்து 4 பேர் வருகிறார்கள் என்றால் அவர்களைப் பிரித்து விலக்கிவிட்டுச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. திரு. லத்தீப் அவர்கள் அதை அனுபவிக்கவில்லை போலிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதியிலே இருந்து வருபவர்களை, தள்ளி வைத்து விட்டுப் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஒருமுறை நானும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் பேசி, பெரிய சிரமம் ஏற்பட்டது. நான் இருக்கிற நடைமுறைச் சிரமங்களை உணருகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பஸ்ஸில் ஏற்படுகின்ற வசதிக் குறைவு இந்நிலையில் இருக்கும்போது, எதாவது நேரம் ஆகிவிட்டதென்று டாக்ஸி பிடித்து வந்தால், இங்கே நுழை வாயிலில் போலீஸ் அதிகாரிகள் நின்று கொண்டு வண்டியை இங்கே நிறுத்தவிடாமல், பின்புறமாக விரட்டித் தொலைதூரத்திற்குத் தூரத்துகிறார்கள். அங்கே இறங்கி இங்கே வருவதற்கு நேரம் ஆகிறது; அதனால் 5 நிமிடம், 10 நிமிடம் ஆகிறது. கார் வைத்திருக்கிறவர்கள், சொந்தமாக வைத்துக்கொள்ள வசதி இருந்தால், அமைச்சர்கள் போல் இருந்தால், இங்கே அனுபவிக்கிறார்கள். ஆனால், நாங்கள் டாக்ஸியிலேதான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, இதனால், 5 நிமிடம், 10 நிமிடம் காலதாமதமாகி, இடையூறு ஏற்படுகிறது. நான் பலமுறை தங்களிடம் கூறியிருக்கிறேன்; அவையில் கூறியிருக்கிறேன்; செயலாளரிடம் கூறியிருக்கிறேன். எழுத்து மூலமாகத் தங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். இதற்கு இதுவரையிலே நீங்கள் பரிகாரம் தரவில்லை. ஆகவே. இனிமேலாவது இந்த மாதிரி சிக்கலில்லாமல், நேரடியாக அவை வாயிலில் வந்து இறங்க வசதியும் வாய்ப்பும் தர வேண்டும். போலிஸ்காரர்கள் தொல்லை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதற்கும் ஒரு பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. உக்கிரபாண்டியன் : தலைவர் அவர்களே, ரூமிலிருந்து கோட்டைக்கு வருவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ரூமிலிருந்து கோட்டைக்கு என்றால் டாக்சிகள் வரமாட்டேன் என்கிறார்கள், பெரிய தூரத்திற்குத் தான் வருவேன் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லுகிறவர்களை உள்ளுக்குள்ளே

1977 ஆகஸ்ட் 5] [திரு. க. உக்கிரபாண்டியன்]

அனுமதிக்கக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். ஒன்று, கோட்டைக்கு வரவேண்டும், அப்படி இல்லை என்றால் கோட்டைக்கு வரமாட்டேன் என்று சொல்லுகிற டாக்சிகளை அனுமதிக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : குறிப்பிட்ட டாக்சி நம்பரைக் குறித்துக் கொடுத்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்ன கருத்தை நேற்றைய தினம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாலே சட்டமன்ற உறுப்பினர்களை தொலைவில் கொண்டுபோகவேண்டுமென்று உத்திரவு போடப்படவில்லை. அனுமதி சீட்டு இல்லாதவர்கள் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்று தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தத் தொல்லை இருக்குமானால், உடனடியாக கவனித்து ஆவன செய்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் என்று போடப்பட்டிருக்கிற பேருந்துகளில், * * என்று போடப்பட்டிருப்பது, முறைதானா, சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

3. அறிக்கை அளித்தல்.

விதி 82-ன் கீழ் மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அளித்த அறிக்கை.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும்—நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது சட்டப் பேரவையில் நடந்த விவாதத்தில் 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் உணவு தானியங்களின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியைப் பற்றி குறிப்பிடப்பட்டது.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 3 (1)-வது பிரிவின்படி உணவு தானியங்கள் மற்றும் அப்பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள இதர பொருள்களின் மீது வரி 1 சதவிகிதமாக

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நண்பகல் 9-36-இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.